Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, SEPTEMBER 20 2024

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 20, 2024 | ஒளி: 10 கதிர் 055 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# கெஹலியவின் மகனுக்கு தடை



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகனும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரருமான ரமித் ரம்புக்வெல்லவுக்கு சொந்தமான இரண்டு அதிசொகுசு வீடுகளை கொழும்பு மேல் நீதிமன்றம் முடக்கியுள்ளது.

தொடர்ச்சி P2




### ஏதேனும் அசம்பாவித நிலைமை ஏற்படுமாயின்

# “சூனியமாகும்”

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது, வாக்களிப்பு நிலையத்தில் ஏதேனும் அசம்பாவித நிலைமை ஏற்படுமாக இருந்தால், அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்குகளை சூனியமாக்க நேரிடும் என்பதுடன், அங்கே மீண்டும் வாக்கெடுப்பை நடத்தும் வரையில் நாடாளவிய ரீதியிலான இறுதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டை கட்டாயமானது இல்லை என்றும், வாக்காளர் அட்டை கிடைக்காதோர் வாக்களிப்பு நிலையத்தில் செல்லுபடியான அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்களிக்க முடியும் என்று தெரிவித்துள்ள அவர், “வாக்கு உங்கள் உரிமை, பலம். அதனைக் கட்டாயம் பயன்படுத்துங்கள்.” என கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், வியாழக்கிழமை (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

“ ஜனாதிபதி தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, செப்டம்பர் 21 ஆம் திகதி இயலுமானவரைக் காலைவேளையிலேயே சென்று வாக்குரிமையைப் பயன்படுத்தி விடுங்கள் என்று கேட்டுக்கொண்ட அவர், வாக்களித்த பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள்.

தொடர்ச்சி P2

# “வாக்களிக்குமாறு இரந்து கேட்க முடியாது”

ஆறு முக்கிய விடயங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதனடிப்படையில், வாக்களிக்குமாறு இரந்து கேட்டல், எவரேனும் தேருநரின் வாக்கைப் பரிந்து கேட்டல், குறிப்பிட்ட எவரேனும் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாமென்று எவரேனும் தேருநரை தூண்டி வசப்படுத்த முயலுதல், தேர்தலில் வாக்களிக்க வேண்டாமென்று தேருநரை தூண்டி வசப்படுத்த முயலுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தேர்தல் முடிவுகளை திரையிட தடை

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை பொது வெளியில் திரையிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வியாழக்கிழமை (19) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர்



பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ உரையாற்றுக்கையில்,

தொடர்ச்சி P2





### நெடுந்தாரகை பயணிகள் படகு

# சேவையை ஆரம்பித்தது

நெடுந்தாரகை பயணிகள் படகு சுமார் ஒரு வருடத்தின் பின்னர் வியாழக்கிழமை (19) தனது சேவையை ஆரம்பித்துள்ளது. படகில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப் பணிகளை தொடர்ந்து, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நெடுந்தாரகை பயணிகள் படகு வியாழக்கிழமை (19) உத்தியோகப்பூர்வமாக கையளிக்கப்பட்டது.



# “சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும்”

### தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் ஜனாதிபதி தெரிவிப்பு

தேசியப் பாதுகாப்புச் சபை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் வியாழக்கிழமை (19) காலை கூடியது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைச் சுதந்திரமான மற்றும் சுதந்திரமான தேர்தலாக நடத்துவதற்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும்,

தொடர்ச்சி P2

# சமூக ஊடகங்களில் வெளியிடத் தடை

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் அன்று வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிக்கும் சந்தர்ப்பங்களையும் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களையும் நிழற்படமெடுத்தல் மற்றும் வீடியோ எடுத்தல் அல்லது சமூக ஊடக வலைத்தளங்களில் வெளியிடுதல் தேர்தல் சட்டத்தை மீறும் செயல்கள் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஆகையால், அத்தகைய



செயல்களைத் தவிர்க்குமாறு அனைத்து சமூக ஊடக வலைத்தள கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கும் அவற்றின் நிர்வாகிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு விடுத்துள்ளது.

# 500 பணியாளர்கள் பாதிப்பு

பொலன்னறுவை, பக்கமூன பிரதேசத்தில் உள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் சுமார் 500 பணியாளர்கள் திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பக்கமூன பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் வியாழக்கிழமை(19) காலை இடம்பெற்றுள்ளது. சுகயீனமுற்ற பணியாளர்கள் பக்கமூன பிரதேச வைத்தியசாலையிலும் அத்தனகடவல வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# நான்கு துப்பாக்கி சூட்டில் நால்வர் பலி

நாடளாவிய ரீதியில், புதன்கிழமை (18) இரவும் வியாழக்கிழமை (19) மாலை 6 மணிக்கு உட்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற நான்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில், நால்வர் உயிரிழந்துள்ளனர். நிகவெரட்டிய, ரஸ்நாயக்கபுர நம்முவாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சிறிய

தொடர்ச்சி P2

# சனியன்று விசேட போக்குவரத்து திட்டம்

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 1,358 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய விசேட பஸ் சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதி பொதுமுகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்காக 175 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# “9 மாகாணங்களிலும் கண்காணிக்கின்றோம்”

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அனைத்து மாவட்டங்களிலும் 32 குறுகிய கால தேர்தல் கண்காணிப்பாளர்களைக் கண்காணிப்பில் ஈடுபடுத்தியுள்ளனர். இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளதாவது

குறுகிய கால கண்காணிப்பாளர்கள் பிரசாரம் முடிவடைந்ததன் பின்னரான காலத்தில் இடம்பெறும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு தினம் அன்றைய தினம் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு ஆரம்பமாவது, வாக்களிப்பு, வாக்குகள் எண்ணப்படுவது தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுவது போன்றவற்றைக் கண்காணிப்பார்கள்.

தொடர்ச்சி P2



### கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக

# 1,124 பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தி திட்டம்





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முயற்சியால் முதல்கட்டமாகத் திருகோணமலையில் உள்ள 348 பாடசாலைகளுக்கு solar panel வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் மின்சார கட்டணம் செலுத்த இயலாத நிலையில் பல்வேறு பாடசாலைகள் காணப்படுவதாக ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, கிழக்கு மாகாணத்தில் உள்ள 1,124 பாடசாலைகளில் சூரிய மின்சக்தி திட்டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் ஆரம்பித்து வைத்தார். அதன் முதல் கட்டமாக 342 பாடசாலைகளுக்கு ஆளுநரால் solar panel வழங்கி வைக்கப்பட்டது.

இந்த திட்டத்தை ஆரம்பித்து வைத்த ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள்,மாணவர்கள் உட்பட பெற்றோர்களும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்




ஏதேனும் அசம்பாவித நிலைமை ஏற்படுமாயின்

# “சூனியமாகும்”

தேர்தல் விதிமீறல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

தேர்தல்கள் கடமைகளுக்காக சகல அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நியமனக் கடிதத்தின்படி உரிய இடத்திற்குச் செல்ல வேண்டும். அவர்களின் நியமனக் கடிதங்களை மாற்றவோ, இரத்துச் செய்யவோ முடியாது. கடமைக்கு வராவிட்டால் அது தண்டனைக்குரிய குற்றமாகும். இதேவேளை, வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்குகள் எண்ணும் நிலையங்களுக்குள் தேர்தல் சட்ட விதிகளை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையத்திற்குள் செல்வதற்கு வாக்காளர்கள், வாக்களிப்பு நிலைய பணியாளர்கள், வேட்பாளர்கள், தேர்தல் பிரதிநிதிகள், கண்காணிப்பு பிரதிநிதிகள், தெரிவத்தாட்சி அதிகாரியால் அனுமதி வழங்கப்பட்டவர்கள் தவிர்ந்த வேறு எவருக்கும் அனுமதி வழங்கப்படாது.

இதனால் தேர்தல் காலத்தில் சட்டத்தைக் கடுமையாகச் செயற்படுத்துமாறு அனைத்து பாதுகாப்பு தரப்பினருக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு அவசர நிலைமையின் போதும் அழைப்பதற்காக முப்படையினரும் தயாராக வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களிப்புகள் முடிவடைந்த பின்னர் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் வாக்குகள் எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துவரப்பட்ட பின்னர் மாவட்டங்களில் அந்தந்த நிலையங்களில் இரவு 7 மணிக்கு வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாகும். தபால்மூல வாக்குகளை எண்ணும் நடவடிக்கை அன்றைய தினம் பிற்பகல் 4.15 மணியளவில் ஆரம்பமாகும். வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியிடப்படும்.

அனைத்து வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களில் இருந்தும் சகல முடிவுகளும் கிடைத்த பின்னரே தேர்தல்கள் செயலகத்தால் இறுதி முடிவு அறிவிக்கப்படும். ஏதேனும் வாக்கெண்ணும் நிலையத்தில் அல்லது மாவட்ட முடிவுகள் வருவதில் தாமதம் ஏற்படுமாக இருந்தால், அது வரும் வரையில் காத்திருக்க வேண்டும். இதனால் முடிவுகள் வரும் வரையில் பொறுமையுடன் நடந்துகொள்ளுமாறு மக்களை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

வாக்களிப்பு நாளில் வாக்களித்த பின்னர் மற்றும் வாக்குகள் எண்ணும் காலப்பகுதியில் அனைத்து வாக்காளர்கள் உள்ளிட்ட அனைவரையும் வீடுகளில் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஏதேனும் காரணம் இன்றி வீடுகளுக்கு வெளியே வீதிகளில் கூடியிருப்பதைத் தவிர்க்குமாறு கேட்கின்றோம். அதேபோன்று, வாக்குகள் எண்ணப்படும் போதும் பெரிய திரைகளில் மக்களைக் கூட்டி பெறுபேறுகளைப் பார்த்தல், வீதிகளில் பட்டாசுகள் வெடித்துக் கூடியிருத்தல், கொண்டாட்டங்களில் ஈடுபடுதல், வெளிச்சமான பலுன்களை பறக்கவிடுதல் என்பன சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான ஒன்றுகூடல்கள் அனைத்தும் மக்கள் ஒன்றுதிரட்டல் குற்றமாகக் கருதிப் பாதுகாப்பு தரப்பினரால் அதனைக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யவும் முடியும்.

இதேவேளை, வாக்களிப்பு நிலையத்தில் ஏதேனும் அசம்பாவித நிலைமை ஏற்பாடுமாக இருந்தால் அந்த வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரியின் அறிக்கைகமைய அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்குகளைச் சூனியமாக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும். அது தேர்தல் முடிவுகளுக்குப் பாதிப்பாக ஆமையுமாக இருந்தால் அங்கே மீண்டும் தேர்தல் நடத்தப்படும் வரையில் இறுதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாது போகும் என்றார்.

இதனால் வாக்களிப்பு நிலையத்தை அண்மித்த பகுதிகளில் சுற்றித்திரிதல், வன்முறைகளில் ஈடுபடுதல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளைக் குழப்புதல் ஆகியவற்றைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்கின்றோம் என்றார்.

சட்டத்தைக் கடுமையாகச் செயற்படுத்துமாறு அனைத்து பாதுகாப்பு தரப்பினருக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அமைதியைப் பாதுகாப்பதற்காக பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், எந்தவொரு அவசர நிலைமையின் போதும் அழைப்பதற்காக முப்படையினரும் தயாராக வைக்கப்பட்டுள்ளனர். தமது குடும்பத்தினரை வீடுகளில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

குடும்பத்தில் எவருக்காவது ஏதாவது நடந்தால் அதனால் அவரின் குடும்பத்தினருக்கே பாதிப்பாக அமையுமே தவிர ஜனாதிபதி வேட்பாளர்களுக்குப் பாதிப்பாக அமையாது. இதனால் வாக்களித்த பின்னர் வீடுகளிலேயே இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

## கெஹலியவின்...

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்னவினால் இந்த உத்தரவு வியாழக்கிழமை (19) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவின் மகனான ரமித் ரம்புக்வெல்ல கொழும்பு, கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் 80 மில்லியன் மற்றும் 65 மில்லியன் ரூபாய்களுக்கு இரண்டு அதிசொகுசு வீடுகளை வாங்கியுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு நீதிமன்றில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் விசாரணைகள் முடிவடையும் வரை இந்த 2 அதிசொகுசு வீடுகளையும் பயன்படுத்தத் தடை விதிக்குமாறு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து, இந்த கோரிக்கைக்கு இணங்க, எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி வரை இந்த இரண்டு அதிசொகுசு வீடுகளையும் பயன்படுத்துவதற்குத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## “வாக்களிக்குமாறு...

அத்துடன், தேர்தல் தொடர்பான, (யாதேனும் அலுவலக முறையிலான துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, புகைப்படம், சித்திரம் அல்லது அறிவித்தல் எதனையும் தவிர்ந்த) யாதேனும் நுண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, புகைப்படம் அல்லது சித்திரம் அல்லது அறிவித்தல் அல்லது எவரேனும் வேட்பாளருக்கு குறித்தொதுக்கப்பட்ட சின்னம் எதனையும் விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டால் தண்டனைக்குரிய குற்றமெனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தேர்தல் முடிவுகளை...

தேர்தல் முடிவுகளை பொது வெளியில் திரையிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது வெளியில் திரையிடுவதால் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படலாம். எனவே, வன்முறைகளைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளைப் பொதுமக்கள் தங்களது வீடுகளிலிருந்தவாறு தனிப்பட்ட முறையில் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.



## “சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும்”

வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குப் பூரண ஆதரவை வழங்குவது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாத வகையில் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாதுகாப்பு நிறுவனங்களின் தலைவர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

## 500 பணியாளர்கள்...

சுகயீனமுற்றுள்ள பணியாளர்களில் உடல் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## “9 மாகாணங்களிலும் கண்காணிக்கின்றோம்”

இன்று எங்கள் பணியை வலுப்படுத்தும் குறுகியகால பார்வையாளர்கள் நகரங்கள் மற்றும் கிராமங்களிற்குச் செல்வார்கள், அவர்களுடைய கண்காணிப்புகள் ஒன்பது மாகாணங்கள் குறித்த அவதானிப்புகளை மேற்கொள்வதற்கு இன்றியமையாதவையாகும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி தலைமை கண்காணிப்பாளர் இன்டா லசே தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் குறுகிய கால கண்காணிப்பாளர்கள் இரண்டு சர்வதேச குழுவாகச் செயற்படுவார்கள்,அவர்கள் தங்கள் பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேர்தல் திணைக்களத்தில் இடம்பெறவுள்ள செயற்பாடுகள் குறித்து நன்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

26 கண்காணிப்பாளர்களை ஏற்கனவே கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தியுள்ளோம், அவர்கள் ஆகஸ்ட் 29 முதல் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் தேர்தலிற்கான தயாரிப்பு நடவடிக்கைகள்,தேர்தல் பிரசாரத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

## நான்கு துப்பாக்கி...

கடையொன்றை நடத்தி வரும் ஒரு பிள்ளையின் தந்தையான அப்துல் இம்சான் அஹமட் என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது கடையைத் திறப்பதற்காக வியாழக்கிழமை (19) அதிகாலை 5.45 மணியளவில் தனது வீட்டிலிருந்து புறப்பட்ட அவர், பிரதேசவாசிகள் வந்து பார்த்தபோது, துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கடையில் கிடப்பதைக் கண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மிதிகம, அக்ரயப்பன பிரதேசத்திலுள்ள மீன் சந்தை ஒன்றின் உரிமையாளர் வியாழக்கிழமை (19) காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தகவல் வெளியாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதான காலும் சதுரங்க என்ற மீன் வியாபாரி துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். இந்த கொலையானது வெளிநாட்டில் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு குற்றவாளியின் செயல் என தற்போதைய விசாரணையில் தெரியவந்துள்ளது.

மீன் பிடிக்க வந்த மேலும் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மாத்தறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெஹிவளை சாரங்கரா வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக கொஹுவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுபோவில, சாரங்கரா வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரான (43) வயதுடைய நாடகம் விஸ்வநாதன் (ஆனந்தா) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முழு தலைக்கவசத்துடன் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டைச் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவத்திற்கு மோட்டார் சைக்கிளை வழங்கியதாகக் கூறப்படும் இரண்டு சந்தேகநபர்கள் கொட்டாவ பிரதேசத்தில் வசிக்கும் 25 மற்றும் 30 வயதுடைய இருவர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புதன்கிழமை (18) இரவு 8 மணியளவில் தங்காலை நலகம பொல்தவான சந்தியில் உள்ள தென்னந்தோப்பில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞன் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தங்காலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

தேஷான் எரந்த என்ற 33 வயதுடைய கால்நடை உரிமையாளர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் திருமணமாகாதவர் மற்றும் தங்காலை நலகமவில் வசிப்பவர். மாடு கட்டச் சென்ற இளைஞன் வீடு திரும்பாத நிலையில், குடும்பத்தினர் தேடியபோது துப்பாக்கிச் சூட்டில் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தங்காலை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தங்கல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சனியன்று விசேட போக்குவரத்து திட்டம்

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளை இலகுவாக்கும் வகையில், கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பல விசேட ரயில் சேவைகள் நடைபெறவுள்ளதாக ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசாங்க அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்காக இந்த விசேட ரயில் சேவை அமுல்படுத்தப்பட்டடுள்ளது. கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டைக்கு இரண்டு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். இதேவேளை, தேர்தல் நடைபெறும் நாளான 21 ஆம் திகதி சனிக்கிழமை வழமையான நேர அட்டவணையில் ரயில் சேவை இயக்கப்படும். எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறுந்தூர ரயில் சேவைகள் குறைக்கப்படலாம். ஆனால், நீண்ட தூர ரயில் சேவைகள் வழமை போன்று இயங்கும் என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புலமைப்பரிசில் வினாத்தாள்:

## சர்ச்சை குறித்து விசாரணை

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாப்பத்திரம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை சம்பந்தமாக விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

பரீட்சைகள் திணைக்களமும், குற்றப் புலனாய்வு திணைக்களமும் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றன என்று கல்வி அமைச்சு வியாழக்கிழமை (19) அறிவித்துள்ளது.

விசாரணைகள் முடிவடைந்த பின்னரே இப்பிரச்சினை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் போது வினாத்தாளின் முதல் மூன்று வினாக்களும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது அவை தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில், 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் 3 வினாக்களை நீக்கி பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுமாறு பரீட்சை திணைக்களத்தினால் செவ்வாய்க்கிழமை (17) அறிவிக்கப்பட்டிருந்தது அந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பெற்றோர் சிலர் பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக புதன்கிழமை (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



## ‘நெடுந்தாரகை பயணிகள் படகு’

# சேவையை ஆரம்பித்தது

நெடுந்தாரகை பயணிகள் படகு“ சுமார் ஒரு வருடத்தின் பின்னர் வியாழக்கிழமை (19) தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

படகில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப் பணிகளை தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நெடுந்தாரகை பயணிகள் படகு வியாழக்கிழமை(19) உத்தியோகப்பூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு இறங்குதுறைக்கு சென்ற ஆளுநர், படகைப் பார்வையிட்டார். இதுவரை காலம் மாகாண சபையின் பொறுப்பில் காணப்பட்ட இந்த படகானது 52 மில்லியன் ரூபாய் செலவில் திருத்தப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமது தீவில் நீண்டகாலமாகக் காணப்பட்ட போக்குவரத்து பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்தமை தொடர்பில், ஆளுநருக்கு நெடுந்தீவு மக்கள் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.





ஆளுநரின் கடும் முயற்சியின் பயனாக நெடுந்தாரகை மீண்டும் தமது சேவையை ஆரம்பிப்பதாகவும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது, நெடுந்தாரகை பயணிகள் படகின் திருத்தப் பணிகளுக்காக துரித நடவடிக்கையை மேற்கொண்ட ஜனாதிபதிக்கும், ஜனாதிபதி செயலகத்திற்கும், துறைசார் அமைச்சுக்கும் ஆளுநர் நன்றியை தெரிவித்துள்ளதுடன், தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

பயணிகள் சேவையை வியாழக்கிழமை (19) ஆரம்பித்துள்ள நெடுந்தாரகை படகு, தினமும் நெடுந்தீவில் இருந்து ஒரு தடவை குறிகட்டுவான் இறங்குதுறைக்கு பயணிக்கவுள்ளது. நெடுந்தாரகை படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்க முடியும் என்று ஊவாமாகாண ஆளுநர் அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பணிகள் ஆரம்பம்






■ ரீ.எல்.ஜவ்பர்கான், பு.கஜிந்தன், துசிதகுமாரத சில்வா

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் சனிக்கிழமை(21) நடைபெறவிருக்கும் நிலையில், வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளதுடன், பாதுகாப்பு தொடர்பில் விசேட ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடிகள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றில் அமைக்கப்படவுள்ளன. அந்தவகையில், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களை, வாக்குச் சாவடிகள் அமைப்பதற்காக அந்தக் கிராமத்துக்குப் பொறுப்பான கிராம சேவகர்களிடம் கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை(19) நாடளாவிய ரீதியில் இடம்பெறுகின்றது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்ட வாக்கண்ணும் நிலையமாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வாக்கெண்ணும் நிலையத்தில் வாக்குகள் எண்ணும் அறைகள் உட்பட வாக்கெண்ணும் நிலைய தயார்ப்படுத்தல் நடவடிக்கைகள் மிகவும் துரிதமாக இடம்பெற்று வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவித்தாட்சி அதிகாரியுமான திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு இந்து கல்லூரியில் குறித்த ஜனாதிபதித் தேர்தல் வாக்குகளை எண்ணுவதற்கான தயார்ப்படுத்தலில் பொலிஸ் திணைக்களம், இலங்கை மின்சார சபை. தேசிய நீர் வளங்கள் வடிவங்கள் அமைப்புச் சபை, சுகாதாரத் திணைக்களம், சமூக சேவை திணைக்களம், மாவட்ட செயலகம் தேர்தல் திணைக்களம் உட்பட பல்வேறு திணைக்களங்கள் துரித தயார்ப்படுத்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளன.










# கௌரவிப்பு...

■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மணி மாஸ்டர் விருதுக்கான திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு புதன்கிழமை(18) மாலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வி.எம்.சி.ரி (V.M.C.T) நிறுவனத்தின் இயக்குநர் பொறியியலாளர் .சூ.விமலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்துகொண்டார்.

இதன் போது மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற குறித்த திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

# மூன்று வாகனங்கள் மோதி விபத்து; ஒருவர் காயம்



அக்குரஸ்ஸ - தெனியாய வீதியில் ஹுலங்தாவ பிரதேசத்தில் வியாழக்கிழமை (19) மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தொன்று, வீதியில் பயணித்த மற்றுமொரு பேருந்தைக் கடக்க முயன்றபோது, எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது, மோட்டார் சைக்கிளின் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தின் சாரதியின் கவனக்குறைவே இந்த விபத்துக்குக் காரணம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# சவப்பெட்டியில் இருந்து பிணங்களும் எழுந்து ஓடும்

ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள நிலையில், வாக்களிப்பு, சனிக்கிழமை (21) காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரையிலும் நடைபெறவிருக்கின்றது. வாக்காளர்களும், தங்களுடைய சொந்த இடங்களுக்கு சென்று கொண்டிருக்கின்றனர். அதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலை, இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன. சர்வதேச கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். வாக்களிப்புக்கு முந்திய, வாக்களிப்பு நாள், பெறுபேறுகளுக்குப் பிந்திய கண்காணிப்புகளை அவர்கள் மேற்கொள்வர்.

ஆகையால், ஜனாதிபதித் தேர்தல் என்பது தனிநபர் வெற்றியல்ல, நாட்டின் எதிர்காலத்திற்கான அரசியல் தலையீடாகும். அன்றிலிருந்து நாட்டுக்கு கை கொடுப்பது அரசியல் தலைமைதான். ஒரு நாடாக நாம் ஆபத்துக்களை எடுத்துச் செயல்படும் நிலையில் இல்லை. கடந்து செல்லும் ஒவ்வொரு தருணமும் நாட்டிற்கு ஒரு முக்கிய பங்கைப் பிரதிபலிக்கும். அந்த முடிவுகள் ஒவ்வொன்றும் நாட்டின் எதிர்காலத்தைத் தாங்கும் கோபுரமாக மாறும்.

அப்படிப்பட்ட தருணத்தில் நாம் வாழ்ந்த காலம் கடந்து விட்டது. நெருக்கடிக்கு எதிராக நாட்டு மக்கள் போராடியதால் நாடு இவ்வளவு துயரமான நிலைக்குத் தள்ளப்படவில்லை. இது ஊதிய நேரம் மற்றும் ஓய்வு அல்ல. ஓரளவு ஆறுதல் மட்டுமே கிடைத்துள்ளது. அதை வெற்றியாக மாற்றத் தொடர்ந்து பாடுபட வேண்டும்.

காலை ஏழு மணிக்கு வாக்களிக்கும் வரிசையில் சேருங்கள், கனவு இளவரசர்களை ராஜாவாக்க அல்ல, அல்லது அவர்கள் மயங்கிய அரசியல் நீரோட்டத்தை மற்றவருக்கு அனுப்பும் நோக்கத்தில் அல்ல, எல்லாவற்றிற்கும் மேலாக நிலத்தின் நிகழ்ச்சி நிரலை வைப்பது.

உள்ளமும் புத்தியும் இணைந்து எடுக்கும் முடிவுதான் இந்த நாட்டின் தலைவிதியை இனி வரும் காலங்களில் சொல்லும். எனவே, கவனமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

தேர்தலின் மிக மோசமான பகுதி தேர்தலுக்கு பிந்தைய மற்றும் தேர்தலுக்கு முந்தைய வன்முறையாகும்.

இலங்கையில் தேர்தலுக்குப் பிந்தைய மற்றும் முன்னைய வன்முறைகள் ஒரு வரலாறு உண்டு. அரசியல் அதிகாரத்திற்காக கருணைக் கொலை சமூகம் துள்ளிக் குதிப்பதைக் கேட்டால், பிணம் கூட சவப்பெட்டியில் இருந்து எழுந்து ஓட ஆரம்பிக்கும்.

தேர்தல் வன்முறைக்குப் பல விளக்கங்கள் உள்ளன. எத்தனை வியாக்கியானங்கள் இருந்தாலும், தேர்தல் வன்முறை என்பது பலவீனமான மக்களின் வன்முறை மனநிலை மட்டுமே என்று நாங்கள் நம்புகிறோம்.

யார் வெற்றி, தோல்வி என்பது மக்களுக்கு கவலையில்லை. அவர்கள் இன்னும் சிறிது காலம் வாழ விரும்புகிறார்கள். இதனாலேயே, பிறருக்காகப் போராடி முதுகை உடைப்பது ஏன் என்ற விடயத்தில் தொலைந்து போகிறார்கள்.

அதிகாரம் தேடும் அரசியல்வாதியின் ஆட்டம் விளையாட்டல்ல, சில சமயம் தனக்குச் சொந்தமான அனைத்தையும் பணயம் வைத்து இந்த விளையாட்டை விளையாடுவார். உலகில் மிக மோசமானது அரசியல் அதிகாரம் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம்.

வாக்களிக்காதிருப்பது என்பது எதிர்ப்பை வெளிப்படுத்துவது அல்ல, மாறாக அது சரணடைவதாகும் என அமெரிக்க அரசியல்வாதியான கெய்த் எலிஸன் தெரிவித்திருந்தார். ஜனநாயக அடிப்படை உரிமையான எம் ஒவ்வொருவரினதும் வாக்குரிமையை நாம் தவறாது பயன்படுத்துவோம் என வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 15

# போருக்குப் பிந்தைய அனுசரணை அரசியல்

தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையில் போருக்குப் பிறகான அனுசரணை அரசியல் என்பதை ராஜபக்ஷ முன்னெடுத்த போரும் இராணுவத்தின் முதன்மை நிலையுமே தீர்மானித்தன.தனது அனுசரணை அரசியலுக்காக அவர் சிங்கள, பௌத்த பேரினவாதத்தைக் கையிலெடுத்தார். போருக்குப் பிறகு, ஜனாதிபதி ராஜபக்ஷ, கிராமப்புறங்களில் இருந்து பெருமளவிலான சிங்கள ஆண் இளைஞர்களைத் தேசிய அரசியலிலும், தனது அரசியல் ஆதரவுத் தளத்திலும் வெற்றிகரமாக மீண்டும் இணைத்து, அவர்களுக்கு அரச நிதியைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பை அளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சனத்தொகையின் இந்தப் பிரிவினர் முக்கியமாக 18-30 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் அவர்கள் தங்களைச் சிங்கள-பௌத்த அடையாளத்துடன் வலுவாக அடையாளப்படுத்துகின்றனர். பெரும்பாலானோர் கிராமப்புறங்கள், குறைந்த அளவிலான கல்வித் தகுதியைக் கொண்டவர்கள் மற்றும் அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் மொனராகலை ஆகிய வறிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களில் கால் பகுதியினர் - கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்கள். அங்கு பெரும்பாலான சிங்களவர்கள் கல்-ஓயா மற்றும் கந்தளாய் போன்ற நீர்ப்பாசன அடிப்படையிலான குடியேற்றங்களில் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறை குடியேறிகளாக வாழ்பவர்கள். எனவே, சிறுபான்மையினருக்கு எதிரான செயற்பாடுகளுக்கான ஆதரவுத் தளத்தையும் ராஜபக்ஷ உருவாக்கினார். இராணுவம், அரச நிர்வாகம் ஆகியவற்றின் அனுசரணையோடு, சிறுபான்மையினரின் நிலங்கள் பறிமுதலுக்குள்ளாகின. சிறுபான்மையினர் பெரும்பான்மையினராக வாழ்ந்த நாட்டின் வடக்குக் கிழக்கில் இனப்பரம்பலை மாற்றுவதில் அனுசரணை அரசியல் முக்கிய பங்கு வகித்தது.

மற்ற முந்தைய ஆட்சிகளைப் போலவே, ராஜபக்ஷ ஆட்சியும் அரசியல் அதிகாரத்திற்கான மையத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளைப் பொருளாதார வளர்ச்சிக்கான போராட்டங்களுடன் ஒத்திசைக்கும் முயன்றது. நாட்டில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல, அபிவிருத்திக்கான தேவையுள்ள பொருளாதாரப் பிரச்சினையே என்று வாதிட்டது. முன்பு போலவே அனுசரணை அமைப்புகளைப் பேணுகையில், ஜனாதிபதியும் அவரது பரிவாரங்களும் புதிய நிதி ஆதாரங்கள் மூலம் தங்கள் ஆதரவாளர் வலையமைப்புகளை மீண்டும் உருவாக்க முயன்றனர். இராணுவம் மற்றும் 'போர் தொழில்கள்' மிகவும் நம்பிக்கைக்குரிய வழிகளாக மாறியது. மற்ற நிதி ஆதாரங்கள் இல்லாத நிலையில், மகாவலி நிதி மற்றும் தனியார் மயமாக்கல் என முன்னர் கிடைத்த அனைத்தும் தீர்ந்துவிட்டமையால்), இராணுவம் அவரது திட்டங்களில் நேரடியாக ஒருங்கிணைக்கப்பட்டது, இது கிட்டத்தட்டத் தவிர்க்க முடியாததாகத் தோன்றியது. ராஜபக்ஷவுக்கு மட்டுமல்ல, அரசியலில் எதிர்கால அரசியல் தலைமைகளுக்கு, அவர்களின் ஆதிக்கம் மற்றும் மேலாதிக்க அரசியல் திட்டங்களை முன்னெடுப்பதற்குப் புலிகளைத் தோற்கடிப்பது மிக முக்கியமானது. நீண்ட காலமாக, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் காரணமாக, சிங்கள அரசியல் பிரமுகர்களால், தமது மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களில் தமிழ்ச் சமூகத்தை வெற்றிகரமாக இணைத்துக் கொள்ள முடியவில்லை. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் மூலம் ராஜபக்ஷ இந்தத் தடையை முறியடித்தார். இறுதிக் கட்டப் போரில் அவர் பயன்படுத்திய மற்றும் வெளிப்படுத்திய இராணுவ வலிமை மற்ற எதிர்க்கட்சிகளுக்குத் தெளிவான செய்தியை அனுப்பப் பயன்படுத்தப்பட்டது.

இந்தப் பின்னணியில், ராஜபக்ஷவின் கீழ், சிங்களப் பெரும்பான்மையினர் பல்வேறு வழிகளில் அரச அனுசரணையைப் பெற்றனர். ராஜபக்ஷவின் கீழ் புதுப்பிக்கப்பட்ட சிங்கள-பௌத்த தேசியவாத அரசத் திட்டமும் அவரது தலைமையின் கீழ் அரசின் ஆதரவின் கருத்தியல் தன்மையும் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை.

இராணுவ வேலைவாய்ப்பு மூலம் சிங்கள இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட பொருளுதவி, மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பும் ஆட்சியின் கருத்தியல் அம்சத்தை நிறைவு செய்தது. புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியானது பெரும்பான்மையான சிங்கள வாக்காளர்களுக்குத் தனது சொந்த கருத்தியல் பாதையை நியாயப்படுத்த ஆட்சிக்கு உதவியது. இதன் விளைவாக, விடுதலைப் புலிகள் மற்றும் அதன் இராணுவ நடவடிக்கைகள் இல்லாவிட்டாலும், ராஜபக்ஷ ஆட்சியால் சிங்கள வாக்காளர்கள் மத்தியில் தனது ஆதரவுத் தளங்களை மீள் கட்டமைக்க முடிந்தது.

போருக்குப் பிந்தைய இலங்கையின் அரசியல் முன்னேற்றங்கள், சிறுபான்மை சமூகங்களிலிருந்து சில உயரடுக்கினருக்கும் பயனளிக்கும் தனிப்பட்ட அனுசரணையின் விரிவாக்கத்தின் மூலம் உயரடுக்கு அரசியலில் சிறுபான்மை சமூகப் பிரிவுகளை இலக்கு வைத்து வெற்றிகரமான ஒருங்கிணைப்பு மற்றும் அணிதிரட்டல் உத்திகளைப் பரிந்துரைக்கின்றன. இந்த மூலோபாயம் பல உயரடுக்கு பிரிவினரின் வர்க்கத்தைப் பொருட்படுத்தாமல், ஒருங்கிணைக்க முடிந்தது. ஏற்கெனவே, கருத்தியல் மற்றும் பொருள் வெகுமதிகளின் வடிவங்களில் பயன்படுத்தப்படும் அதிகப்படியான அனுசரணையானது, அரசியல் வட்டாரங்களில் உள்ள பலரை ராஜபக்ஷவின் நேசவாத ஆட்சிக்கு உள்வாங்குவதில் வெற்றிகண்டது. இந்தக் கூட்டணியால் பிரசாரம் செய்யப்பட்ட வலதுசாரி அரசியல், எந்த வகையான தீவிரமான அல்லது சமத்துவ அரசியல் பார்வையிலிருந்தும் மேலும் மேலும் அரச கட்டமைப்பை நகர்த்தியுள்ளது.

தற்போதைய அரசியல்-கட்சித் தலைமையிலான ஆதரவாளர் முறையின் உத்வேகம், கிராமப்புறங்களில் சமூக உறவுகளை வடிவமைப்பதில் ஒரு முக்கிய அங்கமாக இருந்த கொலனித்துவ காலத்திற்கு முந்தைய காலகட்டத்தை மீண்டும் காணலாம். கொலனித்துவ ஆட்சியின் கீழ், அரசியல் மற்றும் பொருளாதார நவீனமயமாக்கலின் சில கூறுகள் இருந்தபோதிலும், சமமற்ற முறையில் பின்பற்றப்பட்டாலும், பாரம்பரிய ஆதரவு உறவுகள் ஆறு நூற்றாண்டுகள் ஐரோப்பியக் கொலனித்துவ ஆக்கிரமிப்பில் தொடர்ந்து இயங்கின. கொலனித்துவ பிரித்தெடுக்கும் பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக புதிய வாய்ப்புகள், ஒரு புதிய வர்க்கம், காலனித்துவ முதலாளித்துவம் மற்றும் ஒரு புதிய தொழிலாள வர்க்கத்தின் எழுச்சி ஆகியவற்றுக்கு வழி வகுத்தன. வணிகப் பொருளாதாரத்தில் தொழிலாள வர்க்கத்தின் மீது செல்வாக்கைப் பெறுவதற்கு ஈடாகப் பொருள் நலன்களை வழங்குவதன் மூலம் கொலனித்துவம் மற்றும் முதலாளித்துவம் அதன் சொந்த ஆதரவின் வடிவங்களை வழங்க முடிந்தது. சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில், இத்தகைய பழைய மற்றும் மிக சமீபத்திய ஆதரவாளர் வலையமைப்புகள் மறுசுழற்சி செய்யப்பட்டு மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டன. 1930களில் இருந்து அரசியல் கட்சி அமைப்பின் நிறுவன மயமாக்கலுக்கு இணையாக அனுசரணை அமைப்பின் நிறுவன மயமாக்கல் சமகால அரசு-சமூக உறவுகளில் குறிப்பிடத்தக்க எதிர்மறை மரபுகளை விட்டுச்சென்றதோடு அரசியலில் வலதுசாரி மேலாதிக்கத்தின் எழுச்சிக்கு பங்களித்தது.

இன்று, அதன் மேலாதிக்கம் மற்றும் விளைவுகள் பெரும்பாலும் சமூகத்தின் அன்றாட வெளிப்பாடுகளில் தெளிவாகப் புலப்படுகின்றன. 'பந்தம் பிடிக்கிறாயா', 'தெரிந்த ஒருவரும் இல்லையா', 'உள்ளே யாரையாவது பிடிப்போமா' ஆகியன இன்றைய அரசியல் நிர்வாகத்துடனான சாமானியனின் உறவில் பயன்படுத்தப்படும் இயல்பான சொல்லாடல்கள். இவையே அனுசரணை அரசியலின் நவீன வடிவங்கள்.

பல தசாப்தங்களாக, சிங்கள கீழ்த்தட்டு வர்க்க மக்களை இணைத்துக்கொள்ள அனுசரணை அரசியல் அமைப்புமுறையின் சீரான பயன்பாடானது சிங்கள உயரடுக்கின் போட்டி அரசியல் திட்டங்களின் விளைவால் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. இது சிறுபான்மை இனக் குழுக்களை அரச அனுசரணை விநியோகத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளியதுடன் அவர்களைச் சமமற்ற முறையில் நடத்துகிறது. 1970களின் முற்பகுதியில் அரசின் பொருளாதார மற்றும் சமூகப் பங்கை விரிவுபடுத்தியது மற்றும் ஒரு விரிவான சமூகநல அரசை அறிமுகப்படுத்தியது, ஆளும் சிங்கள-பௌத்த உயரடுக்கிற்கு, கீழ்-வர்க்க சிங்கள மக்களிடம் இருந்து தங்கள் ஆட்சிக்கான சம்மதத்தைப் பெறுவதற்கு இது உதவியது. ஆனால், காலப்போக்கில் திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் வருகை சமூக நல அரசைச் சீரழித்தது. இதனால் கீழ் வர்க்க சிங்கள மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காகச் சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் கருத்தியல் கூறுகள் முன்னிலைக்கு வந்தன. பொருளாதாரத்தோடு, சிங்கள-பௌத்த பேரினவாதம் இணைக்கப்பட்டது. சிறுபான்மையினரின் பொருளாதாரச் சீரழிவுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வழிகோலப்பட்டது.

இந்த பொருள், சித்தாந்த உறவின் முக்கிய பயனாளிகள் பெரும்பான்மை சிங்களவர்கள், அவர்கள் இந்த கருத்தியல் அமைப்புமுறைக்கு ஆதரவான ஆதரவாளர் முறைக்கு அதிகளவில் பாதுகாப்பு அளித்தனர். 1977 முதல் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் ஒரு புதிய நகர்ப்புற மையப் பொருளாதாரம் தோன்றியதன் மூலம், முழு ஆதரவாளர் அமைப்பும் அதன் கருத்தியல் அடித்தளங்களும் மிகப்பெரிய மாற்றத்தைச் சந்தித்தன. இந்த பின்னணியில், ஆதரவாளர் விசுவாசத்தை அப்படியே தக்கவைக்கப் பொருள் வளங்கள் போதுமானதாக இல்லாத போதெல்லாம், போட்டியிடும் உயரடுக்கு பிரிவுகள் வலதுசாரிகளுடன் தொடர்புடைய இன, மத கருத்தியல் உணர்வுகளை ஈர்க்கும் நடவடிக்கைகளில் இறங்கினர். ஆளும் உயரடுக்குகள் தமக்கெதிரான எதிர்ப்புச் சக்திகளைக் கையாள்வதற்காக அரசியல் மையத்தில் வலதுசாரி சக்திகளை வளர்க்கிறது. இது பொதுபல சேனா, இராவண பலய, சிங்கலே எனப் பல வடிவங்களை எடுத்தது.



## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களைப் பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராள மனம் படைத்தோர், தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என ஏராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது, அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களைத் துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை.

பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

நன்றி – பருத்தியூர் பால.வைரவநாதன்

## கடிதங்கள்

### குப்பைத் தொட்டிகள் வேண்டும்



நுவரெலியா பொலிஸ் பிரிவிட்குட்பட்ட நானுஓயா, கிளரண்டன் தோட்டப் பகுதியில் உரிய குப்பைத் தொட்டிகள் காணப்படாததால் அப்பகுதி மக்கள் மிக அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

குப்பைகள் வீசப்படும் இடத்தின் அருகில் கிறிஸ்தவ தேவாலயம் உள்ளதால் தேவாலயத்திற்கு வருவோர்கள் மற்றும் அவ்வீதியில் பயணங்களை மேற்கொள்வோர் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும், கட்டாகாலி நாய்கள் குப்பைகளை; வீதிக்கு இழுத்துச் செல்வதால் அப்பகுதியில் அதிக துர்நாற்றம் வீசப்படுவதாகவும் மழைக்காலங்களில் வெள்ளநீரினால் குப்பைகள் அடித்துச் செல்லப்பட்டு வீதியில் கிடப்பதால் வாகனங்கள் செல்வதற்கும், பயணிகள் நடைபாதையை மேற்கொள்வதற்கும் சிரமமாக உள்ளதாக பிரதேசவாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

- மயூரதி

# யூனியன் வங்கி புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக தில்ஷான் ரொட்ரிகோ

யூனியன் வங்கி தனது புதிய பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியாக டில்ஷான் ரொட்ரிகோ அவர்களை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. வங்கியியல் துறையில் இரண்டு தசாப்த காலத்துக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள ரொட்ரிகோவின் நியமனம், வங்கியின் மெருகேற்றிடும் மாற்றத்துக்கு முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவரின் தலைமைத்துவத்தின் கீழ், இலங்கையின் முன்னேற்றகரமான வங்கியியல் துறையில் உயர்ந்த நிலைக்கு செல்வதற்கு எதிர்பார்ப்பதுடன், டிஜிட்டல் மயமாக்கல் யுகத்தில், புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய மூலோபாயங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அடையாளமாகத் திகழ்கின்றது.



ரொட்ரிகோ கருத்துத் தெரிவிக்கையில், “வங்கியியல் புத்தாக்கம் மற்றும் சேவைச் சிறப்பு ஆகியவற்றில் முன்னிலையில் திகழ்வதற்கு யூனியன் வங்கி தன்னை அர்ப்பணித்துள்ளது. எமது மூலதன வலிமையை பயன்படுத்தி, வளர்ச்சியை எய்துவதுடன், நுகர்வோர் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை துறைகளுக்கு எமது பிரசன்னத்தை மேம்படுத்துவது போன்றவற்றில் நாம் அதிகளவு கவனம் செலுத்துவோம். நாடு முழுவதிலும் காணப்படும் எமது கிளை வலையமைப்பினூடாக நாம் உச்ச பயனைப் பெற்று, எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் எமது டிஜிட்டல் ஆற்றல்களை மாற்றியமைக்கவும் எதிர்பார்க்கின்றோம். யூனியன் வங்கி சமூக தொழில்முயற்சியாண்மை பாடசாலை (UBSSE) என்பதனூடாக, நிலைபேறான தொழில்முயற்சியாண்மையை கட்டியெழுப்புவதற்கு யூனியன் வங்கி எதிர்பார்க்கின்றது. நேபாள கோடீஸ்வரரான கலாநிதி. பினோத் சௌத்ரி அவர்களின் வழிகாட்டலில் இயங்கும், யூனியன் வங்கியின் பிரதான பங்காளரான *CG Corp Global* குரூப்பின் நோக்கத்துடன் பொருந்தியதாக வங்கியின் மூலோபாய முன்னுரிமைகள் அமைந்திருக்கும். இலங்கையின் பொருளாதாரம் அண்மைக் காலத்தில் உறுதித் தன்மையை எய்தி வருகின்றமையானது, யூனியன் வங்கிக்கு அதன் வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்கு உகந்த சூழலை ஏற்படுத்தியுள்ளது. உற்பத்தி பொருளாதாரம், பெறுமதி சேர் ஏற்றுமதிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்தல் போன்றவற்றை வலிமைப்படுத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்” என்றார்.

யூனியன் வங்கியின் புதிய பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரொட்ரிகோவை வரவேற்று வங்கியின் தவிசாளர் நிர்வாணா சௌத்ரி கருத்துத் தெரிவிக்கையில், “அடுத்த 3 5 வருட காலப்பகுதியினுள் இலங்கையின் சிறந்த ஐந்து வங்கிகளில் ஒன்றாக யூனியன் வங்கியை தரமுயர்த்துவதற்கு சிறந்த வகையில் பொருத்தமானதாக தில்ஷானின் அனுபவம் மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்புக்கான அர்ப்பணிப்பு போன்றன அமைந்துள்ளன. பங்குதாரர்களுக்கு பெறுமதி சேர்ப்பது மற்றும் எமது மூலோபாய இலக்குகளை பூர்த்தி செய்வது போன்றவற்றில் அவர்களின் தலைமைத்துவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும்” என்றார்.

வங்கியியல், காப்புறுதி, முதலீட்டு வங்கியியல் மற்றும் ஆடைத் தொழிற்துறை போன்ற பல்வேறு துறைகளிலிருந்து பெருமளவு அனுபவத்தை தில்ஷான் ரொட்ரிகோ கொண்டுள்ளார். அவர் இறுதியாக ஹற்றன் நஷனல் வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரியாக செயலாற்றியிருந்தார். HNB ஃபினான்ஸ் பிஎல்சி மற்றும் லங்கா ஃபினான்ஷியல் பியுரோ ஆகியவற்றின் தவிசாளராகவும், HNB அசூரன்ஸ் பிஎல்சி மற்றும் கார்டியன் அக்குவிட்டி மனேஜ்மன்ட் லிமிடெட் ஆகியவற்றின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் பணிப்பாளராக இவர் பணியாற்றுவதுடன், இலங்கை பணிப்பாளர்கள் நிறுவகம் (SLID) மற்றும் ஏசியன் பாங்கர்ஸ் அசோசியேஷன் ஆகியவற்றுக்கும் பங்களிப்பு வழங்கியுள்ளார். ஐக்கிய இராஜ்ஜியத்தின் *Cranfield* பல்கலைக்கழகத்திலிருந்து MBA பட்டத்தைப் பெற்றுள்ளதுடன், பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் (FCMA) மற்றும் பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சம்மேளனம் (FCCA) ஆகியவற்றின் அங்கத்துவத்தையும் பெற்றுள்ளார்.

# வெளிநாட்டு பல்கலைக்கழக கொடுப்பனவுகளுக்கு
## கொமர்ஷல் வங்கியிடமிருந்து சலுகைகள்

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்காக அப்பல்கலைக்கழகங்களுக்கு பணம் செலுத்தும் மாணவர்களுக்கு அடுத்த மூன்று மாதங்களுக்கு கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்கவுள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

இதற்கிணங்க 2024 நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் புதிய மாணவர் கோப்புகளைத் திறக்கும் இலங்கையர்களுக்கான ஆரம்ப தந்தி பரிமாற்ற (TT) கட்டணங்களை பாதியாகக் குறைப்பதாகவும், அக்காலப்பகுதியில் பெறப்படும் கல்விக் கடன்களுக்கான வட்டி வீதத்தை 0.5% குறைப்பதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.



இந்த சிறப்பு ஊக்குவிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக வெளிநாட்டுக் கல்விக் கொடுப்பனவுகளுக்கு கொமர்ஷல் வங்கியைத் தங்கள் பங்குதாரராக தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்கு, அவர்களின் வெளிநாட்டு பகுதிகளுக்கு சிரமமில்லாமல் பணம் செலுத்துவதற்கு, *UnionPay* சர்வதேச டெபிட் அட்டை இலவசமாக வழங்கப்படும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

மேலதிகமாக, இத்தகைய மாணவர்கள் எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் துரிதப்படுத்தப்பட்ட நடைமுறைகள் மற்றும் வங்கியின் சர்வதேச ரீதியிலான வலுவான வலையமைப்பின் மூலமும் பயனடைவார்கள்.

வங்கியானது எளிமையான, எல்லையற்ற நிதி பரிமாற்றங்களை வழங்குவதற்கு மிக சரியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் வெளிநாட்டுக் கல்வியை எளிதாக்குவதற்கு சிறந்த பங்காளித்துவத்தை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்வியைத் தொடர்ந்து கொண்டு தொழில் புரியும் மற்றும் தொழில் இல்லாத மாணவர்களுக்கு தளர்வான விதிமுறைகளுடன் கல்விக் கடன் வசதிகளை வழங்குகிறது. இந்தக் கடன்கள் மீளச்செலுத்துவதற்கான நீண்ட காலத்தையும் மற்றும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களையும் கொண்டவையாக திகழ்கின்றன. மேலதிகமாக, இக்கடன் வசதியானது மாணவர்கள் தமது கடனின் முதலினை முதலில் செலுத்தாது முதல் இரு வருடங்களுக்கு வட்டியை மட்டுமே செலுத்தும் சலுகையை வழங்குகிறது. அதாவது இரண்டு வருடத்திற்கு பின்னரே முதலினை செலுத்தக்கூடிய வசதி இதன் மூலம் வழங்கப்படுகிறது.

# பாடசாலைக் காதல்...



பத்திரமாய் சிந்தையில் செதுக்கிய
பள்ளிக் காதல் நினைவலைகள்
தீயாய் சுட்டுஎரித்துகண்களைக்
காயம் செய்துகண்ணீரைப்
பரிசளித்துவாழ்வை
ரணமாக்கிமறைகின்றது...!

வேண்டும் என்றே
தண்டனைகள் விரும்பி
பெற்றுஎன்னவள் செல்லும் வழியில்
தவம் இருந்து இரு விழிகளில் நாணம்
விழாக் கோலம் அலக்கரிங்கஉதட்டின்
ஓரம் சிறுபுன்னகைமொட்டுமலரக்
கடந்துசெல்கையில் என் உயிரும்
உறைந்துஅவளுடன் நகர்கின்றதே...!

வார்த்தைகளுக்கு விடைகொடுத்து
மௌனம் நம் இருவரையும் ஆட்சி
செய்ய உலகினில் யாரும் அறியாக்
காதல் மொழியில் சங்கமிக்க
சிந்தையில் சிறுநாணம்
விதை தூவியாம் அறியாமலே
உள்ளம் படபடத்து
இதுவரை உணர்ந்திடாத அச்சத்துடன்
கலந்த இன்பம் குடியமர...!
வழியே அறியாத உலகினில் புகுந்து
காதலோடு கரைந்து புதிதாய் பிறந்து
மழலையில் தவழ்ந்து இதயம் மாற்றி
உடல் கரைத்து உயிர் ஊட்டினோம்
காலத்தால் அழியாத நினைவுகள்...!

தௌபீக்
முஹம்மதுநவீத்
புல்மோட்டையூரான்

# விட்டு விடாதே

ஓர் உண்மை காதல் என்ன செய்யும்..?
ஒன்றுமே செய்யாது
எது நடந்த போதும்
ஒன்றும் செய்யாது
கொஞ்சமும் மாறாது...!

இன்னும் இன்னும் இறுக்கிப்
பற்றியபடி அப்படியே கிடக்கும்
உடைந்து
நொந்து
அழுது
துவண்டு
இன்னும் இன்னும்
கதறி கெஞ்சி
உருகி.. உணர்வற்று

அப்படியே மெல்லமெல்ல
அழிவடைந்து கலைந்து
காணாமல் தான் போகும்...!

நிற்க,
இது எல்லாம் தாண்டி...
பிடித்ததை
கேட்பதை
வேண்டியதை
போராடுவதை
பெற்றுக்கொடுப்பது தான்
‘அப்படியே பற்றிக்கொள்’
‘விட்டு விடாதே’
என வழங்கி விடுவது தான்...!

பிரியமுடன் சிரித்துக்கொண்டு
வழி விடுவதுதான்.

‘அழகாய் வாழ்ந்து விடு’
என அன்பாய் நகர்ந்து விடுவதுதான்’

என்னைக் கேட்டால்...
இந்த இரண்டாவது வகைதான்
மெய்க் காதல் என்பேன்...!

சொல்ல வார்த்தையற்றரணம்,
வலிகளெல்லாம் எந்த கவிதையிலும்
காதலிலும் ஒருபோதும் சேராது

அது உரியவருக்கு மட்டுமே
சொந்தம்...!



வசு –திருமலை



# கலியுகக் காட்சிகள்...!

பெற்றபிள்ளையை குப்பையில் எறிவதும்
பெற்றோரைக் கொண்டு இல்லத்தில் சேர்ப்பதும்

கட்டிய மனைவியை கட்டிப்போட்டடிப்பதும்
கண்ணான கணவனை களவாகக் கொல்வதும்,

கலப்படப் பொருட்களைக் கண்மூடி விற்பதும்
கள்ளிப்பால் கொடுத்துப் பிள்ளையைக்
கொல்வதும்

கைபேசி வழியாக காதலர் பிடிப்பதும்
பெண்களோ ஆண்களின் பின்னால் அலைவதும்

ஆண்களோ பெண்களின் பின்னால் வடிவதும்
பெண்கள்போல் ஆண்களும் கொண்டை
வளர்ப்பதும்

அறிவற்றோன் எங்களை ஆள நினைப்பதும்
தேனென்று சீனியைக் காயச்சியே விற்பதும்

தெருக்களை அமைக்காமல் சுருட்டி எடுப்பதும்
கோடிக் கணக்கிலே கொள்ளை அடிப்பதும்

கொள்கையை விற்று கோவணம் அணிவதும்
பள்ளியில் படிக்காதோர் பட்டங்கள் பெறுவதும்

பல்கலைக் கழகத்தில் புள்ளிகள் குறைப்பதும்
பின்வழி நுழைந்து முன்னுக்கேசெல்வதும்

கள்ளனுக் கெல்லாம் கம்பளம் விரிப்பதும்
கப்பலைத் தினமும் பார்த்துக் கிடப்பதும்

அப்படி எத்தனை கலியுகக் காட்சிகள்..!



நீலையூர் சுதா



பெரியசாமி சுசாந்தனி,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# 'வாடா மல்லி'

**'நூலகத்திற்குப் போ நீ எவ்வளவு முட்டாள் என்பதை புத்தகம் சொல்லும்"**

நாம் என்னதான் அறிவார்ந்தவர்கள் என எண்ணிக்கொண்டாலும், ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது தான் நாம் இன்னும் எவ்வளவு விடயங்கள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டி இருக்கின்றது என ஆச்சரியமூட்டுகிறது. அறிவை வளர்க்க கற்கும் விடயங்களில் நாம் ஒரு துளிதான் கற்றுள்ளோம் என விளங்குகின்றது. அதேபோல், தான் நாம் கற்க வேண்டிய ஒன்று இன்றும் பலரது அறிவாற்றலுக்குத் தெளிவற்ற ஒன்றாகவே இருப்பது ஙரநநச சமூகம் பற்றியும் பால்நிலை புதுமையினரின் வகைகள், அவர்களை எவ்வாறு அழைப்பது சமூகத்தில, ஏன் அவர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள், இன்றைய சூழலில் அவர்களின் வளர்ச்சி எவ்வாறு காணப்படுகிறது என்ற அனைத்துமே மனதில் கேள்விக் கணைகளாகத் தொடுக்கப்படுகின்றது. ஆரம்பகாலம் தொட்டு இவர்கள் இருந்திருந்தாலும் இந்தச் சமூகம் இவர்களை எவ்வாறு சித்திரிக்கின்றது? எவ்வாறான வரலாறு காணப்படுகின்றது. இவர்களுக்கான மதிப்பு காணப்படுகின்றதா இல்லையா என பல கேள்விகள் காணப்படுகின்றன. அவ்வாறிருக்க ஒரு புத்தகம் பால்நிலை புதுமையினரை எவ்வாறு சித்திரிக்கின்றது என்று நோக்குவதற்காக நான் வாசித்த ஒரு புத்தகம் சு.சமுத்திரம் அவர்களின் வாடாமல்லி.

படைப்பாசிரியர் சு.சமுத்திரம் இவர் 1946ஆம் ஆண்டு திருநெல்வேலியில் பிறந்தார். இவர் 15 நாவல்களையும் 8 குறுநாவல்களையும் 500 சிறுகதைகளையும் எழுதியுள்ளார். திருநங்கைகள் பற்றிய 'வாடாமல்லி' நாவல் மற்றும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட பெண் போராளியாக மாறிய 'பாலைபுறா' நாவலும் இவர் படைப்பின் அடையாளங்களாக விளங்குகின்றன. சிறந்த படைப்புகளை வழங்கிய இப்படைப்பாசிரியர் 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கினார். நாவல் பற்றிய அறிமுகம் படைப்பாசிரியர் சு.சமுத்திரத்தினால் படைக்கப்பட்டது. வானதி பதிப்பகம் இன்நூலை பதிப்பாக்கம் செய்துள்ளது. இந்நூலில் முதல் பதிப்பானது 1994ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

369 பக்கங்களைக் கொண்ட இந்நூலானது நாவலின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரையிலும் ஒரு சுவாரஸ்யமான போக்கை கொண்டு காணப்படுகின்றது.

> **பால்நிலை அடக்குமுறைக்குள் இன்னும் சிறைப்பட்டுக் கிடக்கும் பால்நிலை புதுமையினர் சமூகத்தினை புரிந்துகொள்ளும் ஒரு நாவலாகவும்ம். அவர்களுக்கு சக மனிதர்களுக்கான மதிப்பினை வழங்கவும் அவர்களுக்காக நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற பெரிய மனநெருடலையும் இந்நாவல் ஏற்படுத்திச் சென்ற ஒரு படைப்பாகவே விளங்குகின்றது**

நாவலின் கதைச் சுருக்கம், சுயம்பு என்ற கல்லூரி மாணவன் கல்லூரிக்குச் சென்று சில காலங்களில் தான் கல்லூரிக்குச் செல்ல மாட்டேன் தன் படிப்பை இடைநிறுத்தப் போகிறேன் என காரணம் இன்றி தன்னுள்ளே தர்க்கப்பட்டுக் கொள்கிறான். இதற்கு என்ன காரணம் என்று புரியாத நிலையில் அதன் பின்னே உணர்கிறான் சுயம்பு என்ற தன்னுடைய ஆண் தன்மைக்குள் ஒரு பெண் தன்மை வெளிப்படுவதை உணர்ந்தான். இந்த உணர்வு நிலையால் தன்னை மாற்றிக் கொண்டு இந்த சமூகத்தில் அவன் எவ்வாறு வெளி வருகின்றான்.. அவன் படும் இன்னல்கள் அந்த இன்னல்களுக்கு அவன் எவ்வாறு முகம் கொடுக்கின்றான்.

என்பதைப் பேசுவதே வாடாமல்லி நாவலாகும்.

வாடாமல்லி ஓர் விமர்சனப்பார்வை தன்னுடைய வாழ்க்கையில் தான் நினைத்ததைச் செய்ய விரும்பக் கூடிய பெண்ணாக மாறுவதற்கு முன்னாள் தான் அனுபவித்த சித்திரவதைகள் வேதனைகள். வலிகள் என அனைத்தையும் வாடாமல்லி நாவல் அடிதொட்டு நுனிவரை பேசுகின்றது. இந்த நாவலைப் பொறுத்தவரையில் ஆரம்ப முதல் இறுதி வரை ஒரு திருநங்கையினுடைய வாழ்க்கைப் பயணம் எவ்வாறான போராட்டங்களைச் சந்திக்கின்றது என உணர்வுப்பூர்வமான நிலையில் படைப்பாசிரியர் சு.சமுத்திரம் வெளிப்படுத்தியுள்ளார். அன்றைய சமூகத்தில் அவர்கள் எவ்வாறு மதிக்கப்பட்டார்கள்? அவர்களுக்கான நிலை எவ்வாறு காணப்பட்டது அவர்களுடைய தொழில் எவ்வாறு காணப்பட்டது என அனைத்து விதமான விடயங்களையும் உள்ளடக்கி இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய உணர்வுகள் பெண்ணாக மாறிவிட்டது இதை ஒரு கட்டத்தில் உணர்ந்த சுயம்பு தன்னுடைய அழகான குடும்பம் அக்கா, அண்ணா, அப்பா, அம்மா என்று இருந்தும் யாரும் அவளைப் புரிந்து கொள்ளாத நிலை, அதேநேரம், டேவிட் என்ற ஒருவனை நேசிக்கின்றான். அவன் ஒரு மருத்துவக் கல்லூரி மாணவன் இருந்தாலும் கூட அவனுக்கும் சுயம்பு ஏன் இவ்வாறு இருக்கின்றான் என்பது புதிராகவே இருக்கின்றது. மருத்துவரை நாடிச் சென்று வைத்தியம் பார்த்து மருந்து உட்கொள்ள போது, அவனுக்கு வலிப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு தான் பெண்ணாக உணரும் ஆரம்பக்கட்டத்தில் அவன் எதிர்நோக்கிய பிரச்சினைகளைக் கடந்து, ஒரு கட்டத்தில் வீட்டை விட்டு வெளியேறுகிறான். பச்சையம்மா என்ற ஒரு திருநங்கை சுயம்புவை தன்னுடைய மகளாகத் தத்தெடுக்கின்றார். சுயம்பு தன்னுடைய வீட்டை விட்டு சென்னைக்கு செல்கின்றான், பிறகு டெல்லி செல்கின்றான். இப்படியே இவனுடைய பயணங்கள் தொடர, தான் அவன் இல்லை, அவள் என்பதை முழுமையாக மாற்றிக் கொள்கின்றான். நாவலினுடைய இந்த கட்டம் அதாவது தன்னை பெண்ணாக மாற்றிக் கொள்ளும் அந்த வழி நிறைந்த வாழ்க்கை பாதையை மிக உணர்வுப்பூர்வமாக நாவலின் ஊடாக வெளிப்படுத்தி இருந்தார் எழுத்தாசிரியர் சமுத்திரம். பெண்ணாக மாறிய சுயம்பு தனக்கு என்ன பெயர் வைப்பது என்ன அழகாக யோசித்து, அதற்கான காரணங்களோடு மணிமேகலை என்ற பெயரைச் சூட்டி 4 கொள்கின்றான். பின்னர் அவன் என்பது அவள் ஆகிறாள்.

தனக்கான விருப்பத்துடன் தனக்குப் பிடித்த பாதையைத் தேர்ந்தெடுத்தால், மணிமேகலையாய் மகிழ்ச்சி ஏற்படும் என எண்ணினேன். என்னுடைய கற்பனை ஏனோ மாய விம்பமாகியது. சுயம்பு மேகலையாகிறார். இருந்தாலும் கூட, பின்பும் அவள் படும் கஷ்டங்கள் தன்னை பெண்ணாக உணர்ந்தது முதல் தான் மரணிக்கும் வரை திருநங்கையாக எதிர்நோக்கும் சவால்களை இந்நாவலில் தத்ரூபமாகப் படம் போட்டுக் காட்டுகின்றார் என்று கூறலாம். இறுதியில் சுயம்பு என்ற மேகலை எண்ணவாக ஆகிறாள். இந்த சமூகத்தை எதிர்கொண்டு அவள் எவ்வாறு மேலிருந்து வருகிறாள் என்பதை இறுதி முடிவாக படைப்பாசிரியர் எடுத்துக்காட்டுகிறார். உண்மையைச் சொல்லப்போனால், கண்ணீரோடு கடக்க வேண்டிய ஒரு நாவல் பயணமாக இப்புத்தகம் காணப்படுகின்றது. இதை நோக்கிய நம்முடைய செயல்பாடுகளும் புரிதல்களும் என்னவாக இருக்கப்போகின்றது என்று சிந்திக்கத் தூண்டும் ஒரு புத்தகமாகவும் இந்நாவல் விளங்குகின்றது.

உணர்வுகளின் உச்சத்தைத் தொட்டுச் சென்ற படைப்பாசிரியர் சமுத்திரம் அவர்களின் கலைப் பயணத்தின் ஒரு மைல்கல்லாகவே இப்புத்தகம் அமைகின்றது. இந்நாவலினுடைய ஒரு பகுதியாக, அக்காலச் சமூகத்தில் திருநங்கைகள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பது தத்ரூபமாக வெளிப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, "சார் சார் நீங்க கூப்பிட்ட குரலுக்கெல்லாம் வாரவங்க நாங்க குடிசைக்கு நீங்க ஆல் சொல்லி அனுப்பினாலே போதும் செய்யாத குத்ததுக்கும் செஞ்சதா சொல்லுவோம். கை காசுலயும் அபராதம் கட்கிறோம். இந்த ஒரு தடவை மட்டும் இந்த பச்சையம்மா செஞ்ச குத்தத்த கோட்டுல சொல்லுங்க சார்... பொய் கேசு வேணா சார்... ஏ குருவக்கா கிண்டலா பண்ற உன்ன மாதிரி பொட்டைங்க விபசாரம் செய்றதா கோர்ட்டுல வழக்கு போட்டா ஜட்ஜ் சிரிப்பாரு எனக்கே சிரிப்பு வரும் எங்கள மாதிரி பொட்டைங்கள யாரும் வீட்டு வேலைக்கு சேர்க்க மாட்டேங்கிறாங்க சில்லற வியாபாரம் செஞ்சா பொறுக்கி பசங்க கிண்டல் பண்றாங்க. எங்களுக்கும் வயிறு இருக்கே சார் அதுதான் சார் வேற வழி இல்லாம இந்த பொழப்பு செய்யுறோ சார்... நாங்க நல்ல குடும்பத்தில் இருந்து நாசமாகி வந்தவங்க தான் சார்... அது கூட இன்ஜினியரிங் காலேஜ்ல படிச்சது சார்... அரசாங்கம் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்து பெண்களுக்கெல்லாம் செய்து ஆனா பெண்ணாகவும் ஆகாம ஆணாகவும் போகாம அந்தரத்தில் நிற்கிற எங்களுக்கு என்ன சார் செய்து" இந்தப் பகுதியினூடாக. திருநங்கைகள் அக்கால சமூகத்தில் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். வாடாமல்லி நாவலைப் பொறுத்தவரையில் எழுத்தாசிரியர் எளிமையான சுவாரஸ்யமான ஒரு மொழி நடையைப் பயன்படுத்தியுள்ளார். இது நாவலின் இறுதிப் பகுதி வரை ஓய்வெடுக்காமல் வாசிப்பதற்கு உந்துதலாக அமைகின்றது.

வாடாமல்லி நாவலைப் பொறுத்தவரையில், பால்நிலை புதுமையினரின் சமூகத்தில் உள்ள திருநர்களை அழைக்கக்கூடாத சொற்பிரயோகங்கள் அதிகமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இது கிராமப்புற வழக்கு யதார்த்தமான போக்கில் எழுதப்பட்டமையால் அவை பிழையாகச் சொல்ல முடியாத ஒரு நிலைப்பாடும் காணப்படுகிறது. மேலும், தன்னுடைய உணர்வுகளால் தன்னை மாற்றிக் கொள்வது அவர்களுடைய பிழை அல்ல. அதற்கு அவர்களின் குடும்பங்களைப் பிரிந்தும் சமூகத்தில் அசிங்கப்படுத்தப்பட்டு அவர்களை வேற்றவர்களாக கருதியும் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படுவது மட்டுமல்லாமல் அவர்களைத் தொந்தரவுக்குப்படுத்தி, பல துன்பங்களைக் கொடுத்து, வலிகளைச் சுமக்கச் செய்து, சமூகத்திலிருந்து ஒதுக்குகின்றார்கள். இதனை உணர்வுப்பூர்வமாக வாடாமல்லி படைப்பின் ஊடாக ஆரம்பம் முதல் இறுதி வரை நகர்த்திச் சென்றுள்ளார் படைப்பாசிரியர் சமுத்திரம்.

> **பெண்ணாக மாறுவதற்கு முன்னாள் தான் அனுபவித்த சித்திரவதைகள் வேதனைகள். வலிகள் என அனைத்தையும் வாடாமல்லி நாவல் அடிதொட்டு நுனிவரை பேசுகின்றது. இந்த நாவலைப் பொறுத்தவரையில் ஆரம்ப முதல் இறுதி வரை ஒரு திருநங்கையினுடைய வாழ்க்கைப் பயணம் எவ்வாறான போராட்டங்களைச் சந்திக்கின்றது என உணர்வுப்பூர்வமான நிலையில் படைப்பாசிரியர் சு.சமுத்திரம் வெளிப்படுத்தியுள்ளார்**

1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் எழுதப்பட்ட இப் புத்தகமானது அந்த காலகட்டத்தை இரு பரிமாண நிலை வடிவமாக வெளிப்படுத்துவதாகவே இருக்கின்ற நிலையில் அன்றைய காலகட்டம் பால்நிலை புதுமையினரை எவ்வாறு பார்க்கின்றது அவர்களை எவ்வாறு சித்தரிக்கின்றது அவர்களுக்கு ஏன் இந்த சமூகத்தில் இருப்பவர்கள் வேலைத் தர மறுக்கிறார்கள் ஏன் சக மனிதர்களாக இவர்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என விளக்கமாகவும் யதார்த்தமாகவும் வெளிப்படுத்தப்பட்ட ஒரு சிறந்த படைப்பாக 'வாடா மல்லி' நாவல் காணப்படுகின்றது.

'வாடா மல்லி' நாவலை பொறுத்தவரையில், சென்னையின் யதார்த்தமான சூழலையும் டெல்லியின் இயல்பான சூழலையும் வெளிக்கொணர்வதாக படைக்கப்பட்டுள்ளமையால் பால்நிலை புதுமையினர் சமூகத்தை அவர்கள் எவ்வாறு நடத்தினார்கள் என்பதும் தெட்டத் தெளிவாக வெளிக்காட்டப்படுகிறது. ஒரு ஆண் தன் உணர்வுகளால் இயல்பை மாற்றிக் கொண்டு பெண்ணாக மாறுவதும் ஒரு பெண் தன்னுடைய உணர்வுகளால் தன்னை ஆணாக மாற்றிக் கொள்வதால் இந்த சமூகத்தில் இருந்து தள்ளி வைக்கப்பட்டு பால்நிலை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதையும் இந்நாவல் உணர்வுப்பூர்வமாகவும் உண்மையாகவும் எடுத்துக்காட்டுகின்றது.

வண்ணமும் வடிவமும் இருந்தும் உயிர்ப்பு அற்ற காகித மலர்களாக உலவும் திருநர்களின் அவல வாழ்வு வித்தியாசமான ஒரு பார்வையில் சொல்லப்படுகிறது என்று கூறவேண்டும். பலராலும் பேசப்பட்டும் ஒரு புரிதலற்ற ஒரு விடயத்தைத் தூர நோக்கோடு புதிய சிந்தனையில் அணுகிய பெருமை படைப்பாசிரியர் சு.சமுத்திரம் அவர்களையே சாரும். சுயம்பு மேகலையாக மாறிய அந்த நொடியிலிருந்து தன்னுடைய குடும்ப வாழ்க்கையிலிருந்தும் பொது வாழ்க்கையிலிருந்தும் தனித்து விடப்பட்டு சமூகத்தில் பல பெயர்களை வாங்கி அடிகள் பட்டு வாடிப்போய் மீண்டெழுகின்ற நிலை தான் படைப்பாசிரியரின் கற்பனையில் வாடா மல்லி ஆகியது. பால்நிலை அடக்குமுறைக்குள் இன்னும் சிறைப்பட்டுக் கிடக்கும் பால்நிலை புதுமையினர் சமூகத்தினை புரிந்துகொள்ளும் ஒரு நாவலாகவும்ம். அவர்களுக்கு சக மனிதர்களுக்கான மதிப்பினை வழங்கவும் அவர்களுக்காக நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற பெரிய மனநெருடலையும் இந்நாவல் ஏற்படுத்திச் சென்ற ஒரு படைப்பாகவே விளங்குகின்றது. நேரம் கிடைக்குத்தாக இருந்தால் நீங்களும் ஒருமுறை வாசித்துப் பாருங்கள் பால்நிலை புதுமையினர் பற்றிய கசப்பான பக்கங்களின் புரிதல்கள் என்றும் வாடாத நினைவுகளாகவே இருக்கும். "வாடாமல்லி. திருநர்களின் வாடாத கசப்பான வாழ்க்கைப் போராட்டம்."










சந்திரகுமார் யதுஷினி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

# வாக்களிப்பது எப்படி?

இவ்வளவு காலமும் நடக்காதது இப்போது நடக்கப் போகிறது? அரசியல் எல்லாம் எனக்குப் பிடிக்காது, நான் உழைக்கிறேன், அரசாங்கத்தின் உதவி எனக்கு எப்போதும் தேவையில்லை, அவ்வாறு இருக்க நான் ஏன் வாக்களிக்கவேண்டும்? யார் வந்தாலும் எனக்கு ஒன்றும் இல்லை. என்ற ஆதங்கத்துடன் ஒரு சாராரும், மாற்றம் வேண்டும் என்ற நோக்கில் வாக்களிக்கத் தயாராகும் இன்னொரு சாராரும் என வாக்காளர்கள் நகர்ந்துகொண்டிருக்கின்ற பொழுதுகளில் என் மனதில், தேடல்களில் தெரிந்து கொண்ட விடயங்களை வெளிப்படுத்துவதாகவே இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு இன்னும் ஒரு நாள் எஞ்சி இருக்கும் நிலையில், யார் ஜனாதிபதியாகப் போகிறார் என்ற எதிர்பார்ப்போடு 'திக் திக்' நிமிடங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. தீவிரமடைந்திருந்த தேர்தல் பிரசாரங்கள் புதன்கிழமை நள்ளிரவோடு முடிவுக்கு வந்திருக்கின்றன. இந்தநிலையில், பலருக்கும் யாருக்கு வாக்களிக்க வேண்டும்? வாக்களிக்கச் செல்ல வேண்டுமா? என பலவித கேள்விகள் மனதிலே ஊடாடிக் கொண்டிருக்கின்றன.

14.08.2024 அன்று மதியம் 12.00 மணியுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 40 பேர்

> **வழமையாக இரண்டு வேட்பாளர்களில் ஒருவரைத் தெரிவு செய்து X ஒன்றை இட்டு விட்டு வருவது வழக்கம். ஆனால், இம்முறை X என்பதை விடவும் 1,2,3 இலக்கங்கள் மூலமான விருப்பத் தெரிவு முக்கியத்துவமானதாகப் போகலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. இது தேர்தல் மீதான தனிப்பட்ட ஆர்வத்திற்கும் பலருடைய அவதானத்திற்கும் காரணமாக அமைந்திருக்கின்றது**

கட்டுப்பணத்தினை செலுத்தியிருந்தனர். கட்டுப்பணம் செலுத்திய 40 பேரில், 39 பேர் வேட்புமனுவைத் தாக்கல் செய்து தேர்தலில் வேட்பாளர்களாக தம்மை அடையாளப்படுத்தியிருந்தனர்.

அதில், ஒருவரான புத்தளத்தைச் சேர்ந்த டொக்டர் முஹம்மத் இல்யாஸ் மரணமடைந்தார்.

இந்தவகையில், பாணி விஜேசிறிவர்தன, மொஹமட் இல்யாஸ், பிரியந்த புஷ்பகுமார விக்கிரம சிங்க, லக்ஸ்மன், அஜந்த டி சொய்சா, என்டனி விக்டர் பெரேரா, கீர்த்தி விக்ரமரத்ன, ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திசாநாயக, நாமல் ராஜபக்ஷ, சரத் பொன்சேகா, விஜயதாச ராஜபக்ஷ, அரியநேந்திரன் உள்ளிட்ட பலரும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஒரு நாடு ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துகிறது என்பதற்கான அடிப்படை அம்சமாகத் தேர்தல் இருக்கிறது. இதன்படி, இலங்கையில் ஜனநாயக கூறுகளில் அடிப்படையாகக் காணப்படுகின்ற தேர்தல் நடைமுறையில், மிகப் பிரதானமான தேர்தலாகவே ஜனாதிபதித் தேர்தல் அமைந்திருக்கின்றது. கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், 35 பேர் போட்டியிட்டிருந்தனர். இம்முறை அதைவிட வாக்குச்சீட்டு நீளம் அதிகம். அதேபோல, வாக்குச்சீட்டைப் பதிப்பிக்கச் செலவான தொகையும் அதிகம் என கூறப்படுகிறது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கும் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கும் இடையில் ஒரு மில்லியன் பேர் புதிதாக அதிகரித்திருக்கின்றார்கள். அதாவது வருடம் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் பேர் புதிய வாக்காளர்களாகப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். 18 வயதினைப் பூர்த்தி செய்து, வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட அனைவரும் வாக்குரிமை உடையவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இந்தவகையில், ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே எழுபத்தொன்று இலட்சம் (1,71,40354) வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இத்தொகையில், 18 வயதைப் பூர்த்தி செய்த 10 இலட்சம் புதிய வாக்காளர்களும் உள்ளடங்கியிருக்கின்றனர். அப்படியிருக்கும் போது மக்கள் வாக்களிக்கத் தயங்குவதில் நியாயமான காரணம் என்ன இருக்கப் போகின்றது? ஜனநாயகத்திற்கான சிறந்த கட்டமைப்பை உருவாக்குவதில் வாக்குகளுக்கு முக்கியப்பங்கு இருக்கிறது.

புதிய வாக்காளர்கள் தவிர, முன்பு தேர்தலில் வாக்களித்தோருக்கும், இம்முறை ஜனாதிபதித் தேர்தல் ஒரு புதுவித அனுபவத்தைத் தருவதாகவே இருக்கின்றது. வழமையாக இரண்டு வேட்பாளர்களில் ஒருவரைத் தெரிவு செய்து X ஒன்றை இட்டு விட்டு வருவது வழக்கம். ஆனால், இம்முறை X என்பதை விடவும் 1,2,3 இலக்கங்கள் மூலமான விருப்பத் தெரிவு முக்கியத்துவமானதாகப் போகலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. இது தேர்தல் மீதான தனிப்பட்ட ஆர்வத்திற்கும் பலருடைய அவதானத்திற்கும் காரணமாக அமைந்திருக்கின்றது.

விருப்பு வாக்கு என்பது கடந்த காலங்களிலும் நடைமுறையில் இருந்திருக்கிறது. ஆனால், நடந்து முடிந்த 8ஆவது ஜனாதிபதித் தேர்தல்களிலும் விருப்பு வாக்கைப் பயன்படுத்துவதற்கான தேவை உருவாகியிருக்கவில்லை. இம்முறையும், ஜனாதிபதித் தேர்தலில் விருப்பு வாக்கு என்பது, கட்டாயமாக வழங்கப்பட வேண்டியது அல்ல, தனியே ஒரே ஒரு வேட்பாளருக்கு

> **தேர்தலில் வாக்காளர்கள் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காகத் தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதிய அடையாள அட்டை, மதகுருமாருக்கான அடையாள அட்டை, கிராம அலுவலர் ஊடாக விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கட்டாயம் எடுத்துச் செல்லவும் மறந்து விட வேண்டாம்**

மட்டும் இடுவதன் மூலம், எங்கள் தெரிவு இவர் மட்டும்தான் என்று குறிப்பிட உரிமை இருக்கிறது. பலதரப்பட்ட போட்டியாளர்கள் போட்டியிடுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் யாராவது ஒருவருக்கு 50% வாக்குகள் கிடைக்காத இடத்து, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவர் யார் என்று அறிவிக்க வேண்டிய கடப்பாடு இருப்பதனால், இந்த விருப்பத் தெரிவுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, தேர்தலில் வாக்காளர்கள் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காகத் தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதிய அடையாள அட்டை, மதகுருமாருக்கான அடையாள அட்டை, கிராம அலுவலர் ஊடாக விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கட்டாயம் எடுத்துச் செல்லவும் மறந்து விட வேண்டாம்.

கடந்த காலங்களில் வழக்கமாக முதல் வாக்கு எண்ணிக்கையிலே வெற்றியாளர் அறிவிக்கப்படுவதுண்டு இந்த தடவை முதல் முறையாக இரண்டாவது எண்ணிக்கைக்குத் தயாராக இருக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறது. 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் படி ஒரு வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற மொத்த வாக்குகளில் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும். முதல் சுற்றில் எந்த வேட்பாளரும் பெரும்பான்மை எடுக்கவில்லை எனில், அதிகமாக வாக்குகளைப் பெற்ற இரண்டு வேட்பாளர்களும் இரண்டாம் சுற்று வாக்கெடுப்புக்கு மாற்றப்படலாம். எனவே, இறுதி முடிவுகளை வெளியிடுவதில் கூட தாமதம் ஏற்படலாம் என்பதையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

மற்றும், யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிக்கும்போது, தனிப்பட்ட நலன்களையும் சலுகைகளையும் முன்னிலைப்படுத்தாது, நாட்டினதும் சமூகத்தினதும் நலன்களை முன்னிறுத்தி தீர்மானம் எடுப்பதற்குரிய சந்தர்ப்பமாகவே 2024ஆம் ஆண்டிற்கான, தேர்தல் களம் மாறி இருக்கிறது.

இந்நிலையில், அமைதியாகச் சென்று வாக்களித்து விட்டு வீடுகளுக்குத் திரும்புவதும், வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்வதும், கருத்துச் சுதந்திரத்தைக் கவனமாகப் பிரயோகிப்பதும் வாக்காளர் சார்ந்த நிலைப்பாடே. எது எவ்வாறாயினும், இந்த நாட்டின் குடிமகனாக, வாக்கு எனும் உயரிய அடையாளத்தை பயன்படுத்திக்கொள்வதன் மூலம் ஜனநாயக அடிப்படையில் செயற்படவும்,தேர்தலில் நமது பங்களிப்பை வழங்கவும் முடியும்.



லெபனான்

தொலைத்தொடர்பு சாதனங்கள் வெடித்து சிதறியதில்

# 20 பேர் உயிரிழப்பு



லெபனானில் பேஜர்கள் வெடிப்பு நடந்த ஒரு நாளுக்கு பிறகு வாக்கி-டாக்கிகள் வெடித்ததில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

லெபனானில் நூற்றுக்கணக்கான பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்ததில் 12 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், பேஜர் வெடிப்புகள் நிகழ்ந்த ஒருநாள் கழித்து ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்தி வந்த பல வாக்கி டாக்கி சாதனங்களும் வெடித்துள்ளன. இதில் 20 பேர் கொல்லப்பட்டதாகவும் சுமார் 450 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவால் பயன்படுத்தப்பட்ட வாக்கி-டாக்கிகள் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகள், பெக்கா பள்ளத்தாக்கு, தெற்கு லெபனான் போன்ற ஹிஸ்புல்லா கோட்டைகளாகக் கருதப்படும் பகுதிகளில் வெடித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் என்று ஹிஸ்புல்லா ஆயுதக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் இதுபற்றி இஸ்ரேல் இதுவரை எதையும் தெரிவிக்காமல் அமைதி காத்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஸ்லோவேகியா

ஸ்லோவேகியாவில்

# கடும் மழை

ஸ்லோவேகியாவில் கடும் மழை பெய்து வரும் நிலையில், அங்குள்ள மேற்கு பகுதிகளில் கடந்த 13ஆம் திகதி சுமார் 200 மி.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது. கடும் மழையால் ஸ்லோவேகியா தலைநகர் பிராட்டிஸ்லாவாவில் கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி நிலைவரப்படி, டனுபே ஆற்றில் 30 ஆண்டுகளில் இல்லாத அளவாக, நீர்மட்டம் 970 செ.மீற்றராக உயர்ந்துள்ளது. இதையடுத்து, பிராட்டிஸ்லாவாவின் பல பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மேலும், ஆஸ்திரியா எல்லையையொட்டி அமைந்துள்ள டெவின் மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் மண்சரிவால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

டெவின் மாவட்டத்தில் மட்டும் வெள்ளம் பாதித்த பகுதிகளில் 100 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள மொராவா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஊருக்குள் வெள்ளம் பாய்ந்துள்ளது.

வெள்ள பாதிப்புகளால் 20 மில்லியன் யூரோ இழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டராபா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தீயணைப்புத் துறையினரும் மீட்புக் குழுவினரும் வெள்ளம் பாதித்த பகுதிகளில் தண்ணீரை வெளியேற்றும் பணிகளில் ஈடுபடுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





வொஷிங்டன்

# “வெள்ளை மாளிகையை மீண்டும் கைப்பற்றுவோம்”

‘தேர்தலில் வெற்றி பெற்று, மீண்டும் வெள்ளை மாளிகையை கைப்பற்றுவோம்” என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடக்கவிருக்கின்றது. குடியரசு கட்சி சார்பில், ட்ரம்ப், ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் மோதுகின்றனர்.

இந்நிலையில், நியூயோர்க்கில் தேர்தல் பிரசாரத்தில் ட்ரம்ப் பேசுகையில், “40 ஆண்டுகளுக்குப் பிறகு நியூயோர்க்கில் குடியரசுக் கட்சி வெற்றி பெறும். நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, குற்றச்சம்பவங்கள், பணவீக்கம் மற்றும் சட்டவிரோத குடியேற்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்துவோம். நாங்கள் வெள்ளை மாளிகையை கைப்பற்றுவோம். நாட்டை சிறப்பாக வழி நடத்துவோம். சமீபத்தில் என்னை கொல்ல எடுத்த முயற்சிகள் எல்லாம் கடவுளால் முறியடிக்கப்பட்டன என்றார்.



இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டின் இரண்டாம் நாளில்

# பலமான நிலையில் நியூசிலாந்து

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டின் நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் பலமான நிலையில் நியூசிலாந்து காணப்படுகின்றது.

காலியில் புதன்கிழமை (18) ஆரம்பித்த இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை, அஜாஸ் பட்டேல், வில்லியம் ஓ ரூர்க்கிடம் (2) எஞ்சிய விக்கெட்டுகளை இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 305 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து சிறப்பான ஆரம்பத்தைப் பெற்ற நிலையில், ரமேஷ் மெண்டிஸிடம் டெவோன் கொன்வே வீழ்ந்தார். தொடர்ந்து ஜோடி சேர்ந்த டொம் லேதமும், கேன் வில்லியம்சனும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 70 ஓட்டங்களுடன் பிரபாத் ஜெயசூரியவிடம் லேதம் வீழ்ந்தார். பின்னர் வில்லியம்சனும், றஷின் றவீந்திரவும் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் 55 ஓட்டங்களுடன் வில்லியம்சனும், 39 ஓட்டங்களுடன் றவீந்திரவும் அணித்தலைவர் தனஞ்சய டி சில்வாவின் அடுத்தடுத்த ஓவர்களில் வீழ்ந்தனர்.

இதையடுத்து, ஜோடி சேர்ந்த டரைல் மிற்செல், டொம் பிளென்டல் ஆகியோர் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் தமது முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று இலங்கையின் முதலாவது இனிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை விட 50 ஓட்டங்களே பின்தங்கியுள்ளது. களத்தில் டரைல் மிற்செல் 41, டொம் பிளென்டல் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.



முதலாவது போட்டியில்

## தென்னாபிரிக்காவை வீழ்த்திய ஆப்கானிஸ்தான்

தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், ஷார்ஜாவில் புதன்கிழமை(18) நடைபெற்ற முதலாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 106/10 (33.3 ஓவ.) (துடுப்பாட்டம்: வியான் முல்டர் 52 (84) ஓட்டங்கள். பந்துவீச்சு: பஸல்ஹக் பரூக்கி 4/35, கஸன்பார் 3/20, ரஷீட் கான் 2/30)

ஆப்கானிஸ்தான்: 107/4 (26 ஓவ. ) (துடுப்பாட்டம்: குல்படின் நைப் ஆ.இ 34 (27), அஸ்மதுல்லாஹ் ஒமர்ஸாய் ஆ.இ 25 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிஜோன் போர்ச்சுன் 2/22, லுங்கி என்கிடி 1/6, ஏய்டன் மார்க்ரம் 1/21)

போட்டியின் நாயகன்: பஸல்ஹக் பரூக்கி

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி இன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

துரைப்பாக்கம்

# பெண்ணின் உடல் பாகங்கள் சூட்கேஸில் சிக்கின



சென்னை துரைப்பாக்கத்தில் சூட்கேஸில் இருந்து பெண் ஒருவரின் உடல் துண்டு துண்டாக கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையை அடுத்த துரைப்பாக்கம் குமரன் நகர் குடியிருப்பு பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக இரத்தக் கறைகளுடன் சூட்கேஸ் ஒன்று கிடந்துள்ளது. இதனைப் பார்த்த அப்பகுதி மக்கள், இது குறித்து துரைப்பாக்கம் பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளனர்.

பின்னர், தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், இரத்தக் கறைகளுடன் இருந்த சூட்கேஸைத் திறந்து பார்த்த போது, துண்டுகளாக்கப்பட்ட பெண்ணொருவரின் உடற்பாகங்களைக் கைப்பற்றினர்..

இதுகுறித்த விசாரணையில், சென்னை மணலி பகுதியைச் சேர்ந்த, 30 வயது மதிக்கத்தக்க தீபா என்ற பெண் என்பது விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, தீபாவை கொலை செய்தது யார்? எதற்காக கொலை செய்யப்பட்டார், வேறு எங்கோ கொலை செய்துவிட்டு உடலை வெட்டி சூட்கேஸில் வைத்து இங்கு வீசிச் சென்றிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரை கைது செய்த பொலிஸார், விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

சத்னா

## கட்டியுடன் போராடிய கிளியை சிகிச்சை மூலம் காப்பாற்றிய மருத்துவர்கள்

மத்தியப் பிரதேசத்தின் சத்னா மாவட்டத்தில் 21 வயதான கிளிக்கு அறுவை சிகிச்சை மூலம் வெற்றிகரமாக கட்டி அகற்றிப்பட்டது.

மத்தியப் பிரதேசத்தின் சத்னா மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் செல்லப்பிராணியான கிளிக்கு கழுத்தில் கட்டி இருப்பது கண்டறியப்பட்ட நிலையில், மருந்துகள் மூலம் அந்தக் கட்டியை சுகப்படுத்த முடியவில்லை. இந்நிலையில், கால்நடை மருத்துவர்கள், அறுவை சிகிச்சை மூலமே அதற்குத் தீர்வு காணமுடியும் என வலியுறுத்தியுள்ளனர். இதற்கிடையே, கடந்த 15ஆம் திகதி இரண்டு மணி நேர அறுவை சிகிச்சைக்குப் பின்னர் கிளியின் கழுத்தில் இருந்த கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது.



மட்டக்களப்பு பற்றி பிக்பாஷ் கனிஷ்ட கிரிக்கெட் தொடர்:

# சம்பியனான பழுகாமம் புல்ஸ்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்தி சபை, மட்டக்களப்பு மாஸ்டர் கிரிக்கெட் கழகம் ஆகியன இணைந்து முதல் தடவையாக நடத்திய 21 வயதுக்குட்பட்டவர்களுக்கான பற்றி பிக்பாஷ் ஜூனியர் தொடரில் மட்டக்களப்பு பழுகாமம் புல்ஸ் அணி சம்பியனானது. மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் காத்தான்குடி லயன்ஸை வென்றே பளுகாமல் புல்ஸ் சம்பியனானது.

இப்போட்டியின் நாயகனாக நித்தியதர்சன் தெரிவானார்.



கிழக்கு மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில்

# கல்முனை அல் பஹ்ரியா பிரகாசிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹிம்



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில், கல்முனை அல் பஹ்ரியா வித்தியாலயம் பிரகாசித்தது.

20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் வித்தியாலயத்தின் யூ.எல். அஸ்ஜத் போட்டித் தூரத்தை 57.6 செக்கன்களில் கடந்து புதிய சாதனையை ஏற்படுத்தி முதலிடத்தைப் பெற்றதுடன், 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.எம்.றிஹான் 300 மீற்றர் தடைதாண்டலில் 42.9 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து புதிய மாகாண சாதனையுடன் முதலிடத்தைப் பெற்றதுடன்,16 வயது பிரிவில் 4,100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் பஹ்ரியா முதலிடத்தைப் பெற்றது.

20 வயதுகுட்பட்ட ஆண்கள் பிரிவில் 4,100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இரண்டாமிடத்தை வித்தியாலயம் பெற்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 20, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.